முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 209/2006

**வாதி தரப்பு சாட்சி–1 அப்துல் அஜீஸ் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**18 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) அ.வ.எண்.225/1986 வழக்கில் சொத்து விபரத்தின் நான்கெல்லை விபரம் என்னவென்றால் சக்கரைக்கனிராவுத்தர், வெள்ளையத்தாராவுத்தர் நிலங்களுக்கு மேற்கே, அழகர்சாமான் நிலத்திற்கு வடக்கு, குமரன், வையாபுரி வகையறா நிலத்திற்கு தெற்கு, தாவூது ராவித்தர் நிலத்திற்கு கிழக்கு ஆகும். என் தகப்பனார் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் சர்வே எண் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, பைமாசி எண் போடப்பட்டுள்ளது. பைமாசி எண் மற்றும் சர்வே எண் இரண்டையும் ஒன்றுபடுத்தும் ஆவணம் எதையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால், அ பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். அழகர்சாமி தாக்கல் செய்த வழக்கின் தாவா சொத்தும், இந்த வழக்கின் தாவா சொத்தும் ஒன்றுதானா என்றால் ஆமாம். இவ்வழக்கின் தாவா சொத்து நான்கெல்லை என்னவென்றால், நான்கெல்லையில் உள்ளவர்கள் பட்டா மாறிவிட்டது. அதனால் எனக்கு ஞாபகமில்லை.

2) பைமாசி எண் 240 தான் இவ்வழக்கின் தாவா சர்வே எண் 598 என எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், அ பதிவேடு மற்றும் SLR ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். 2ம் பிரதிவாதி எனக்கு எதிராக அ.வ.எண்.323/2007 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி தாவா சொத்து தனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். தற்போதுவரை தாவா சொத்தை பிரதிவாதிகள் குடும்பத்தார்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்கள்தான் அனுபவம் செய்து வருகிறோம். தாவா

சொத்திற்கான பட்டா பிரதிவாதிகள் பெயரில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தவறாக பட்டா கொடுக்கப்பட்டது. தாவா சொத்திற்குரிய வரியை பிரதிவாதிகள்தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3) தாவா சொத்திற்கான அடங்கல் பிரதிவாதிகள் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது சுவாதீனத்தில் இல்லாததால்தான் அதன் நான்கெல்லை விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எப்போதும் எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சுவாதீனத்திற்கு நான் இடையூறு செய்ததால்தான் அ.வ.எண்.323/2007 என்ற வழக்கை தாக்கல் செய்தனர் என்றால் சரியல்ல. அ.வ.எண்323/2007 வழக்கில் நான் ஆஜராகி வழக்கை நடத்தினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும், அ.வ.எண்.225/1986 வழக்கில் வாதம் செய்தது போலவே தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றுதான் எதிர்வாதம் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண்,323/2007 வழக்கு முழுமையாக விசாரணை செய்யப்பட்டு, இருதரப்பினரும் சாட்சியம் அளித்தோம் என்றால் சரிதான். அ.வ.எண்.323/2007 வழக்கில் முழு விசாரணைக்கு பிறகு 2ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரியல்ல, தள்ளுபடி ஆகிவிட்டது.

4) அந்த வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீட்டு எண் 39/2011 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேல்முறையீடு முழுவிசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். மேற்படி மேல் முறையீட்டின் உத்தரவை எதிர்த்து இரண்டாம் மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியமாக இருந்திருந்தால் நான் இரண்டாம் மேல்முறையீடு செய்திருப்பேன் என்றும், எனக்கு பாத்தியமில்லாததால்தான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.323/2007 வழக்கில் தாவா சொத்துக்கள் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இரண்டாம் மேல்முறையீடு

செய்யாததால் பிரதிவாதிகளின் உரிமையை ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் தாவா சொத்து தவறானது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல பைமாசி எண் 240க்கு சர்வே எண் 598 என்பதைக் காட்ட முறையான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண். 225/1986 வழக்கில் சர்வே எண் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளார்களா என்றால், சர்வே எண் குறிப்பிடவில்லை என மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுவிட்டேன்.

5) அ.வ.எண்.225/1986 ல் விஸ்தீரணம் 4 ஏக்கர் 15 செண்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விஸ்தீரணம் தவறு என்றால் சரியல்ல, ஆவணத்தில் உள்ளவாறுதான் குறிப்பிட்டுள்ளேன். இவ்வழக்கில் தாவா சொத்தின் சர்வே எண் 598 மற்றும் 600 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்கள் தவறானது என்றும், தாவா சொத்தின் சர்வே எண் 598 மட்டும்தான் என்றால் சரியல்ல. சர்வே எண் 598ன் முழு விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6 ஏக்கர் 99 செண்ட் ஆகும். தாவா சொத்தை பதார் உசேன் ஏலம் எடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பதார் உசேனிடம் இருந்து எனது தகப்பனார் கிரையம் வாங்கியது தவறு என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்றபோது சர்வே எண் குறிப்பிடாமல் கிரையம் பெற்றுவிட்டு, தற்போது பிரதிவாதிகளின் இடத்தை எங்களுடையது என பொய்யாக வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. பைமாசி எண் 240ற்கு கட்டுப்பட்டது எவ்வளவு நிலங்கள் என்றால் ஜமீன் நிலங்கள் அனைத்தும் பைமாசி 240ற்கு கட்டுப்பட்டது.

6) நான் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் என்ன விவசாயம் செய்தேன் என்றால், கம்பு, சோளம் போன்ற மானாவாரி பயிர்கள் விவசாயம் செய்தேன். அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான்தான் பிரதிவாதிகளின்

சுவாதீனத்தை தடை செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை அனுபவம் செய்ததற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவம்த செய்ததில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண். 225/1986 ல் வழக்கிலேயே பைமாசி எண் 240க்கு உரிய சர்வே எண் குறிப்பிடவில்லை என சொல்லியிருந்தும், அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைட்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**